1994 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சின்னசாமி, நீங்கள் சொல்லும் போது பெரியசாமி அவையினுடைய மரியாதையைக் காக்கக்கூடிய அளவில் ** என்று பேசக் கூடாது என்பதற்காகப் பேசியதை** என்று சொல்லியது தப்பு. (குறுக்கீடு)** என்பது போலச் சொல்வது தவறு. (குறுக்கீடு) இந்த அவையில் யாரையும் ** என்று பேசக்கூடாது என்பதற்காக அவர் அப்படிச் சொன்னார். (குறுக்கீடு) அது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அவர் சொன்னது தேவையில்லை.

வினா எண். 272, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

272—

சந்தன மரச் செடிகளை வளர்க்க மானியமும் கடன் வசதியும் அளித்தல்.

***21384-**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:*

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சந்தன மரச் செடிகளை வளர்க்க மானியமும் கடன் வசதியும் அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சந்தன மரச் செடிகள் வளர்க்க மானியமும் கடன் வசதியும் அளிப்பது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இந்த 3 ஆண்டு காலத்திலே நாட்டிலே எந்த முதல் மந்திரியும் சாதிக்க முடியாத பல அற்புத சாதனைகளையெல்லாம், மாண்புமிகு டாக்டர் புரட்சி தலைவி செய்துக் கொண்டு வருகிறார்கள். நமது அரசு ஏழை மக்களுக்காகவும் மலைவாழ் மக்களுக்காகவும் பல நல்ல திட்டங்களைச் செய்து வருகிறது. சந்தனம் என்றாலே இந்தியாவிலேயே முதல் தரமான சந்தன மரங்கள் கிடைக்கின்ற இடம் என்னுடைய திருப்பத்தூர் தொகுதியிலிருக்கும் ஜவ்வாது மலைதான். ஆகவே அங்குள்ள மக்கள் சந்தன மரச் செடிகளை வளர்க்க மானியம் அல்லது கடன் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். மானியம் கொடுப்பதற்குரிய கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியம் கொடுக்கவில்லை என்றால் வேறு எந்தத் திட்டத்தின் கீழ் சந்தனச் செடிகளை வளர்க்க திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரங்கள் வடாற்காடு, திருவண்ணாமலை, சேலம், தர்மபுரி, பெரியார், கோவை, தென்னாற்காடு, திருச்சி மாவட்டம் போன்ற இடங்களில் இயற்கையாகவே வளர்ந்து வருகின்றன. இயற்கையாகவே வளரும் சந்தன மரங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், அவற்றைப் பாதுகாக்கவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் சுமார் 30 லட்சம் நிதி அளவில் 200 ஹெக்டேர் பரப்பளவில் சந்தன மரங்கள் வளர்ச்சியை ஊக்குவிப்பு பணியிலும், நுண் சந்தன கன்று தோட்டங்கள் 100 ஹெக்டேர் பரப்பளவில் உருவாக்கவும், 5 ஹெக்டேர் பரப்பளவில் செயற்கை முறையில் சந்தன மரத் தோட்டங்கள் வளர்த்து அவைகளை செம்மையாக பாதுகாத்து வருகிறோம். அத்துடன் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாடு திட்டத்தின் கீழ் சந்தன மரங்களைப் பாதுகாத்து 5 சந்தன கிராமக் காடுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இன்னொரு புறம் இன்றைக்கு அரசாங்கமே இந்த சந்தன மரங்களை காப்பாற்றுவதில் கடுமையாக போராடிக் கொண்டிருக்கிறது. தனியார் இந்த சந்தன மரங்களை உருவாக்கி அவர்களே உற்பத்தி செய்வார்களேயானால் அவர்களுக்குக்கூட நாம் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய டாக்டர் புரட்சி தலைவி அவர்களுடைய வனச் சோலை திட்டத்தின் கீழ் இன்றையதினம் பல்வேறு நாற்றங்கால்கள் கொடுக்கப்படுகின்றன. அதேபோல சந்தன மரத்திற்கு முன்னுரிமை கொடுத்து வளர்ப்பதற்கு நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி

1994 ஏப்ரல் 13]

அவர்களுடைய வனச்சோலை திட்டத்தில் ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சந்தன மரம் இயற்கையாக வளர்கின்ற பகுதிகளில் பழங்குடி மக்களை வைத்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பது, அவர்களுடைய சமூகப் பொருளாதார வளர்ச்சியை செம்மைப் படுத்துவது போன்ற இப்படிப்பட்ட பணிகளுடைய அடிப்படையிலேதான் நாம் செய்து வருகிறோம். ஒருங்கிணைந்த பழங்குடி மக்களின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2,062 குடும்பங்களைச் சார்ந்த பழங்குடி மக்கள் ஆண்டுதோறும் சுமார் 2.8 இலட்சம் மனித வேலைநாட்கள் வேலைவாய்ப்பு பெறுகின்ற அளவில் உருவாக்கப்பட்டு அவர்களுடைய பொருளாதார, கல்வி நிலையை மேம்படுத்துகின்ற எண்ணத்தில் நாம் செயல்பட்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 273, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு செய்தி-விளம்பரத் துறை அமைச்சர்.

273—

குழந்தைகளுக்கான திரைப்படத்தை ஊக்குவிக்க அளிக்கப்படும் சலுகைகள்.

***15408* — டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பார்—

குழந்தைகள் திரைப்படத்தை ஊக்குவிக்க மத்திய அரசு மற்றும் மாநில அரசு அளித்துள்ள சலுகைகளின் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழக அரசு குழந்தைகள் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரி மற்றும் விளம்பர வரியிலிருந்து விலக்கு அளித்து வருகிறது. குழந்தைகள் திரைப்பட விழா நடத்தவும், உலகக் குழந்தைகள் திரைப்பட விழா நடத்தவும் தேவையான உதவிகளை அளித்து வருகிறது. குழந்தைகள் திரைப்படங்களைத் திரையிட அரசின் அரங்குகளைக் கொடுத்து